**செப்டம்பர் – 17**

# TNPSC துளிகள்

- அசாம் மாவட்டத்தின் கர்பி அங்லாங் மாவட்டத்தில் உள்ள உம்சோவாய் கிராமத்தில் உள்ள திவா பழங்குடியினர், நல்ல ராபி பயிர் பருவத்திற்கான பண்டிகை பிரார்த்தனையாக 2025 ஆம் ஆண்டு லாங்குன் பண்டிகையை கொண்டாடினர்.
- நவீன உத்தி சார் நடவடிக்கைகளில் ஆளில்லா தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதை உறுதிப்படுத்துவதற்காக இந்திய இராணுவம் சியோம் பிரஹார் பயிற்சியினை அருணாச்சலப் பிரதேசத்தில் நடத்தியது.
- மாநிலத்தின் போக்குவரத்து இணைப்பை மேம்படுத்துகின்ற மிசோரமின் முதல் ரயில் பாதையான பைராபி-சாய்ராங் அகலப்பாதை திட்டத்தினைப் பிரதமர் தொடங்கி வைத்தார்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்


## அன்பு கரங்கள் திட்டம்




- அன்பு கரங்கள் திட்டமானது, ஆதரவற்ற மற்றும் எளிதில் பாதிக்கப்படக் கூடிய குழந்தைகளை ஆதரிப்பதற்காக தமிழக அரசினால் தொடங்கப்பட்டது.
- ஏழ்மை நிலையிலான பொருளாதாரப் பின்னணியைச் சேர்ந்த குழந்தைகள் தங்கள் பள்ளிப் படிப்பு மற்றும் உயர்கல்வியைத் தொடர உதவுவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- தகுதியுள்ள குழந்தைகளுக்கு கல்வி உதவியாக இந்தத் திட்டம் மாதத்திற்கு 2,000 ரூபாய் வழங்குகிறது.
- பெற்றோர் இருவரையும் அல்லது பெற்றோரில் யாரேனும் ஒருவரை இழந்த மற்றும் உயிரோடு உள்ள பெற்றோரிடமிருந்து சரியான ஆதரவு இல்லாத குழந்தைகளை இந்தத் திட்டம் உள்ளடக்கியது.
- குழந்தை 18 வயதை அடையும் வரை இந்த உதவியானது வழங்கப்படுகிறது.

# தேசியச் செய்திகள்

## 2010-2019 ஆம் ஆண்டில் தொற்றா நோய்களால் ஏற்பட்ட உயிரிழப்புகள்




- 2010 மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் இந்தியாவில் தொற்று அல்லாத நோய்களால் ஏற்படும் உயிரிழப்புகளில் அதிகரிப்பு பதிவானதாக லான்செட் ஆய்வு காட்டுகிறது.
- இந்த ஆய்வறிக்கையானது, 185 நாடுகளில் COVID-19 பெருந்தொற்று காலத்திற்கு முன்னர் பதிவான உயிரிழப்பு போக்குகளை ஆய்வு செய்தது.
- இந்தியப் பெண்களில், தொற்று அல்லாத நோயால் ஏற்பட்ட உயிரிழப்பிற்கான நிகழ்தகவு 2001 ஆம் ஆண்டில் 46.7% ஆக இருந்தது.
- 2011 ஆம் ஆண்டில் இந்த நிகழ்தகவு 46.6% ஆக இருந்தது மற்றும் 2019 ஆம் ஆண்டில் இந்தியப் பெண்களில் இது 48.7% ஆக உயர்ந்தது.
- இந்த அதிகரிப்பானது கல்லீரல் சிரோசிஸ், நாள்பட்ட நுரையீரல் அடைப்பு நோய் மற்றும் இதரப் பாதிப்புகள் தவிர முக்கியக் காரணங்களால் ஏற்படும் உயிரிழப்பு விகிதங்கள் மோசமடைவதோடு தொடர்பு கொண்டுள்ளது.
- பெண்களுடன் ஒப்பிடும் போது இந்திய ஆண்களில், தொற்று அல்லாத நோய் காரணமான உயிரிழப்பின் அதிகரிப்பு குறைவாக இருந்தது.
- நாள்பட்ட நுரையீரல் அடைப்பு நோய், குருதியூட்டக்குறை இதய நோய் (இஸ்கிமிக்) மற்றும் கல்லீரல் சிரோசிஸ் போன்ற பாதிப்புகளுக்கான நோயறிதல் மற்றும் சிகிச்சையில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் இந்திய ஆண்கள் மத்தியில் ஏற்படும் தாக்கத்தைக் குறைக்க உதவியது.
- 2010 மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில், பெண்களில் 152 நாடுகளிலும், ஆண்களில் 147 நாடுகளிலும் தொற்று அல்லாத நோய்களால் ஏற்படும் உயிரிழப்பு விகிதம் குறைந்துள்ளது.
- இந்த நாடுகள் உலகளாவிய பெண்களின் மக்கள்தொகையில் 82% மற்றும் ஆண்களின் மக்கள்தொகையில் 79% ஆகும்.
- டென்மார்க் நாட்டில் சிறந்த முன்னேற்றத்துடனும், அமெரிக்காவில் மிகக் குறைவான முன்னேற்றத்துடனும் உயர் வருமானம் கொண்ட அனைத்து மேற்கத்திய நாடுகளிலும்

சரிவு பதிவானது.

- சீனா, எகிப்து, நைஜீரியா, ரஷ்யா மற்றும் பிரேசில் போன்ற பெரிய நாடுகளில் ஆண்கள் மற்றும் பெண்கள் இரு பாலினத்திலும் சரிவுகள் பதிவானது.
- தொற்று அல்லாத நோய்களால் ஏற்படும் உயிரிழப்பு இரு பாலினத்தவரிலும் அதிகரித்த சில நாடுகளில் இந்தியாவும் பப்புவா நியூ கினியாவும் அடங்கும்.
- 2010 மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில், பெண்கள் மத்தியில் 41% நாடுகளிலும் ஆண்கள் மத்தியில் 39% நாடுகளிலும் முந்தைய தசாப்தத்தை விட அதிக முன்னேற்றம் பதிவாகின.

## ஞான பாரதம் வலை தளம்





- கையெழுத்துப் பிரதிகளை எண்ணிமமயமாக்குதல், பாதுகாத்தல் மற்றும் பொது அணுகலுக்காக அர்ப்பணிக்கப்பட்ட டிஜிட்டல் தளமான ஞான பாரதம் வலை தளத்தினைப் பிரதமர் தொடங்கி வைத்தார்.
- இந்தியாவில் சுமார் ஒரு கோடி கையெழுத்துப் பிரதிகளின் உலகின் மிகப்பெரியத் தொகுப்பு உள்ளது.
- இந்தியாவின் கலாச்சாரம், இலக்கியம் மற்றும் உணர்வின் குரலாக மாறுவதே இந்த முன்னெடுப்பின் நோக்கமாகும்.
- உலகளாவியக் கலாச்சார மற்றும் படைப்பாக்கத் தொழில்துறைகள் 2.5 டிரில்லியன் டாலர் மதிப்புடையவை என்பதோடு மேலும் டிஜிட்டல் மயமாக்கப்பட்ட கையெழுத்துப் பிரதிகள் இந்தத் துறைக்கு குறிப்பிடத்தக்கப் பங்களிப்பினை வழங்க முடியும்.

## ஜன் ஔஷதி கேந்திரா மையங்களின் விரிவாக்கம்

- ஏழு பெருநகரங்களில் உள்ள ஜன் ஔஷதி கேந்திரா மையங்களுக்கான குறைந்தபட்ச தொலைவு விதியை மத்திய அரசு நீக்கியுள்ளது.
- அந்தப் பெருநகரங்கள் டெல்லி, மும்பை, கொல்கத்தா, சென்னை, பெங்களூரு, ஐதராபாத் மற்றும் அகமதாபாத் ஆகியனவாகும்.
- 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட 46 நகரங்களுக்கும் இந்தப் புதிய விதி பொருந்தும்.
- இது போன்ற நகரங்களில், ஏற்கனவே அமைந்துள்ள மையங்கள் நிறுவப்பட்டு இரண்டு

ஆண்டுகளுக்கும் குறைவாக ஆகியிருந்தால் மட்டுமே ஒரு கிலோமீட்டர் தூர விதி பொருந்தும்.

- பிரதான் மந்திரி பாரதிய ஜன் ஔஷதி பரியோஜனா (PMBJP) திட்டத்தின் கீழ் உள்ள ஜன் ஔஷதி மையங்கள் மலிவு விலையிலான பொதுப் பயன்பாட்டு மருந்துகளை வழங்குகின்றன.
- தற்போது இந்தியா முழுவதும் 11,000க்கும் மேற்பட்ட ஜன் ஔஷதி மையங்கள் இயங்கி வருகின்றன.




## சிறப்பு நீதிமன்றங்களின் விரிவாக்கம்




- மேற்கொண்டு மேலும் அதிக எண்ணிக்கையிலான பிரத்தியேகமான சிறப்பு நீதிமன்றங்களை உருவாக்குவது குறித்து விவாதிக்க மாநிலங்கள் மற்றும் சட்ட அமலாக்க நிறுவனங்களுடன் உயர் மட்டக் கூட்டத்தை நடத்த உள்ளதாக மத்திய அரசு உச்ச நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.
- வழக்கமான நீதிமன்றங்களில் அதிக வழக்குகள் நிலுவையில் இருப்பதால், வழக்காடல் தாமதமாகுவதால், NIA சட்டம் மற்றும் UAPA போன்ற சிறப்புச் சட்டங்களின் கீழ் விரைவான விசாரணைகளை உறுதி செய்வதே இதன் நோக்கமாகும்.
- சிறப்புச் சட்டங்களின் கீழ் விசாரணை நடவடிக்கைகளை காலவரையின்றி தாமதப் படுத்த முடியாது என்று உச்ச நீதிமன்றம் கூறியது.
- நியமிக்கப்பட்ட 52 நீதிமன்றங்களில் 3 நீதிமன்றங்கள் மட்டுமே தற்போது NIA வழக்குகளுக்காக மட்டுமே பிரத்தியேகமாகச் செயல்பட்டு வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- NIA வழக்குகளில் விசாரணைகள் உடனடியாக நடத்தப்படாவிட்டால், விசாரணைக்

கைதிகள் பிணையில்/ஜாமீனில் விடுவிக்கப்பட வேண்டியிருக்கும் என்று நீதிமன்றம் எச்சரித்தது.

- பிரத்தியேக நீதிமன்றங்கள் மற்றும் உள்கட்டமைப்பு இல்லாமல், விசாரணை இல்லாமல் காலவரையற்ற காவலானது ஏற்றுக் கொள்ளத் தக்கது அல்ல என்று உச்ச நீதிமன்றம் வலியுறுத்தியது.

# சர்வதேசச் செய்திகள்

## 44வது SCO RATS சபை




- ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் பிராந்திய தீவிரவாத எதிர்ப்பு அமைப்பின் (RATS) 44வது கூட்டம் ஆனது கிர்கிஸ்தான் குடியரசின் சோல்பன் அட்டாவில் நடைபெற்றது.
- பஹல்காமில் சமீபத்தில் நடைபெற்ற தீவிரவாத தாக்குதலை இந்த சபை கடுமையாக கண்டித்ததோடு, தியான்ஜின் பிரகடனத்தில் மீதான அதன் கண்டனத்தை ஆதரித்தது.
- இந்தக் கூட்டத்திற்கு கிர்கிஸ் குடியரசு தலைமை தாங்கியது.


## பாலஸ்தீனத்திற்கான இரு நாடு தீர்வு



- பாலஸ்தீனத்திற்கான இரு நாடு தீர்வை ஆதரிக்கும் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் தீர்மானத்திற்கு ஆதரவாக இந்தியா வாக்களித்தது.
- இந்தத் தீர்மானமானது 142 நாடுகள் ஆதரவுடனும், 10 நாடுகள் எதிராகவும் வாக்களித்து, 12 நாடுகள் வாக்களிக்காமலும் நிறைவேற்றப்பட்டது.
- காசாவில் போரை முடிவுக்குக் கொண்டு வந்து இஸ்ரேல்-பாலஸ்தீன மோதலுக்கு நியாயமான தீர்வை அடைய நியூயார்க் பிரகடனம் அழைப்பு விடுக்கிறது.
- ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீனப் பிரதேசத்தில் வன்முறை, குடியேற்ற விரிவாக்கம் மற்றும் இணைப்பிற்கு முற்றுப்புள்ளி வைக்க இஸ்ரேல் நாட்டிற்கு வலியுறுத்தப் படுகிறது.
- பாலஸ்தீன சுயநிர்ணய உரிமை மற்றும் காசாவை மேற்குக் கரை பகுதியுடன் இணைப்பதற்கான ஆதரவை இந்தத் தீர்மானம் மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## நிகழ்நேரப் பெருங்கடல் கண்காணிப்பு அமைப்பு





- சென்னையைச் சேர்ந்த தேசியப் பெருங்கடல் தொழில்நுட்ப நிறுவனம் (NIOT), ஒரு உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட நிகழ்நேர பெருங்கடல் கண்காணிப்பு அமைப்பை உருவாக்கியுள்ளது.
- மீன்பிடிப் படகுகளுக்காக வடிவமைக்கப்பட்டுள்ள இந்த அமைப்பானது நீரின் வெப்ப நிலை, உப்புத்தன்மை மற்றும் ஆழம் போன்ற கடல் சார் தரவுகளைச் சேகரிக்க உதவும்.
- ஆழமற்ற கடல் பகுதிகள் மற்றும் கழிமுகப் பகுதிகளில் பெருங்கடல் தளத்தில் எந்தவித இடையூறும் செய்யாமல் இந்த அமைப்பைப் பயன்படுத்தலாம்.

## டா வின்சி ரோபோடிக் அறுவை சிகிச்சை அமைப்பு


- டா வின்சி தானியக்க/ரோபோடிக் அறுவை சிகிச்சை அமைப்பில் பயிற்சி அளிக்கும் இந்தியாவின் முதல் அரசு மருத்துவக் கல்லூரியாக புது டெல்லியின் அகில இந்திய மருத்துவ அறிவியல் கல்வி நிறுவனம் (எய்ம்ஸ்) மாறியது.
- டா வின்சி தானியக்க அறுவை சிகிச்சை அமைப்பானது எய்ம்ஸ் நிறுவனத்தின் திறன்கள், இணையக் கற்றல் மற்றும் தொலை மருத்துவ வசதி (SET) மையத்தில்

திறக்கப் பட்டது.

- இந்த தானியக்கத் தளத்தை Intuitive Surgical நிறுவனம் வழங்கியது.
- இந்தியாவில் பயிற்சிக்காக மட்டுமே அர்ப்பணிக்கப்பட்ட இரண்டு தானியக்க / ரோபோடிக் அமைப்புகளைக் கொண்ட ஒரே நிறுவனம் எய்ம்ஸ் ஆகும்.
- தானியக்க/ரோபோடிக் அறுவை சிகிச்சைப் பயிற்சியானது சிறுநீரகவியல், மகளிர் மருத்துவம், பொது அறுவை சிகிச்சை, அறுவை சிகிச்சை புற்றுநோயியல் மற்றும் தலை மற்றும் கழுத்து அறுவை சிகிச்சை போன்ற நிபுணத்துவங்களை உள்ளடக்கியதாக இருக்கும்.




## கரோனா அடுக்கில் வண்ணத்துப்பூச்சி வடிவிலான துளை





- நாசாவின் சூரிய இயக்கவியல் ஆய்வக அமைப்பானது 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 11

ஆம் தேதியன்று சூரியனில் 5,00,000 கிலோமீட்டர் அகலமுள்ள வண்ணத்துப்பூச்சி வடிவ கரோனா துளையைப் புகைப்படம் எடுத்தது.

- கரோனா துளைகள் என்பது சூரியனின் காந்தப் புலங்கள் திறக்கப்பட்டு, சூரியக் காற்று விண்வெளியில் வெளியேற அனுமதிக்கின்ற பகுதியாகும்.
- இந்த கரோனா துளையிலிருந்து வரும் சூரியக் காற்று 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 14 ஆம் தேதியன்று பூமியை அடையும் என்று எதிர்பார்க்கப் பட்டது.
- இந்த நிகழ்வின் நேரம் சம இரவு பகல் நாளிற்கு/உத்தராயணத்திற்கு அருகில் இருப்பது ரஸ்ஸல்-மெக்பெரான் விளைவு காரணமாக புவி காந்த ஆபத்தை அதிகரிக்கிறது.
- இந்த சூரியப் புயல்கள் செயற்கைக்கோள் செயல்பாடுகள் மற்றும் பூமியில் உள்ள பிற தொழில்நுட்ப அமைப்புகளைப் பாதிக்கக்கூடும்.

## டீசலுடன் ஐசோபியூட்டனால் கலப்பு




- எத்தனால்-டீசல் கலப்பு சோதனைகள் தோல்வியடைந்ததையடுத்து, டீசலுடன் 10% ஐசோபியூட்டனாலை கலப்பது குறித்து இந்தியா ஆராய்ந்து வருகிறது.
- தீப்பற்றும் பண்புகளைக் கொண்ட ஓர் ஆல்கஹால் கலவையான ஐசோபியூட்டனால், ஒரு தனி எரிபொருளாகவும் பரிசோதிக்கப்படுகிறது.
- ஐசோபியூட்டனால்-டீசல் கலப்புகளுக்கான சோதனைகளை இந்திய வாகன / ஆட்டோ மோட்டிவ் ஆராய்ச்சிக் கூட்டமைப்பு (ARAI) மேற்கொண்டு வருகிறது.
- வேளாண் பயன்பாட்டு இயந்திரங்களுக்கு அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயு (CNG) மற்றும் ஐசோபியூட்டனால் கலவை எரிபொருளின் பயன்பாடு குறித்து பரிசீலிக்கப் படுகின்றன.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## சைர்டோடாக்டைலஸ் வனரக்சகா

- அசாமின் டிமா ஹசாவோ மாவட்டத்தில் சைர்டோடாக்டைலஸ் வனரக்சகா என்ற புதிய வகை வளைந்த கால்விரல் கொண்ட மரப் பல்லி கண்டறியப்பட்டுள்ளது.
- அசாம் வனத்துறையைக் கௌரவிக்கும் வகையில் 'வனரக்சகா' என்ற பெயரானது 'வனக் காவலர்' என்று பொருள்படும் சமஸ்கிருதச் சொல்லிலிருந்து பெறப்பட்டது.
- இந்த இனமானது ஒரு சுற்றுச்சூழல் உணர்திறன் மாறுநிலை மண்டலமான, பரெய்ல் மலைகளில் உள்ள ஜாடிங்காவின் காடுகள் நிறைந்த மலைச்சரிவுகளில் காணப் பட்டது.
- இது அசாமில் பதிவு செய்யப்பட்ட ஐந்தாவது சிர்டோடாக்டைலஸ் இனமாகும்.




## புதிய சதுப்புநில மண்டலம்




- தமிழ்நாடு வனத்துறையானது, அடையாறு முகத்துவாரத்தில் உள்ள அடையாறுத் தீவில் ஒரு புதிய சதுப்புநில மண்டலத்தினை உருவாக்கியுள்ளது.
- சதுப்புநில இனங்களில் ரைசோபோரா முக்ரோனாட்டா, ரைசோபோரா அபிகுலாட்டா, அவிசினியா மெரினா மற்றும் எக்ஸ்கோகாரியா அகல்லோச்சா ஆகியவை நடப்பட்டன.
- சதுப்பு நிலங்களில் செடிகளை நடுவதற்கு முன்பு அயல் ஊடுருவல் இனமான ப்ரோசோபிஸ் ஜூலிஃப்ளோரா அகற்றப்பட்டது.
- தீவு முழுவதும் மூன்று முக்கிய கால்வாய்கள் மற்றும் 62 நீர் விநியோகக் கால்வாய்கள் கொண்ட ஒரு மீன் முள் எலும்பு அடிப்படையிலான நீர் விநியோக அமைப்பு உருவாக்கப் பட்டது.
- நீர் ஓட்டம் மற்றும் சதுப்புநில வளர்ச்சியை ஆதரிக்க மீன் முள் எலும்பு

அடிப்படையிலான வடிகால் அமைப்பு கட்டப்பட்டது.

- அடையாறு முகத்துவாரத்தில் கடல் அரிப்பைக் குறைத்து பல்லுயிர்ப் பெருக்கத்தினை ஆதரிப்பதை இந்தப் பசுமை மண்டலம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## ப்ளூம்பெர்க் பில்லியனர்கள் குறியீடு செப்டம்பர் 2025

- ப்ளூம்பெர்க் அறிக்கையின்படி, எலோன் மஸ்க் 384 பில்லியன் டாலர் என்ற மொத்த நிகர மதிப்புடன் இப்பட்டியலில் முதலிடத்தைப் பிடித்தார்.
- லாரி எலிசன் 88.5 பில்லியன் டாலர் மதிப்பு சொத்தினைப் பெற்றதையடுத்து 383 பில்லியன் டாலர் மதிப்புடன் இரண்டாவது இடத்தைப் பிடித்தார், அதே நேரத்தில் மார்க் ஜுக்கர்பெர்க் 4.68 பில்லியயன் டாலர் இழந்த போதிலும் 264 பில்லியயன் டாலர் மதிப்புடன் மூன்றாவது இடத்தைப் பிடித்தார்.
- மைக்கேல் டெல் 151 பில்லியன் டாலர் நிகர மதிப்புடன் பத்தாவது இடத்தைப் பிடித்தார்.
- ஆரக்கிள் நிறுவனத்தின் முதன்மை தொழில்நுட்ப அதிகாரி (CTO) லாரி எலிசன் டெஸ்லா தலைமை நிர்வாக அதிகாரி எலோன் மஸ்க்கை விஞ்சி 1 நாள் மட்டும் உலகின் மிகப் பெரிய பணக்காரராக இருந்தார்.
- எலிசனின் நிகரச் சொத்து மதிப்பு 89 பில்லியன் டாலர் அதிகரித்து 383.2 பில்லியன் டாலரை எட்டியது.

| Rank | Name | Total net worth | $ Last change | $ YTD change | Country / Region |
|---|---|---|---|---|---|
| 1 | Elon Musk | $419B | +$19.4B | -$13.8B | United States |
| 2 | Larry Ellison | $349B | -$14.5B | +$157B | United States |
| 3 | Mark Zuckerberg | $265B | +$1.66B | +$58.1B | United States |
| 4 | Jeff Bezos | $250B | -$1.36B | +$11.2B | United States |
| 5 | Larry Page | $211B | +$546M | +$43.0B | United States |
| 6 | Sergey Brin | $198B | +$519M | +$39.4B | United States |
| 7 | Steve Ballmer | $175B | +$2.85B | +$28.8B | United States |
| 8 | Bernard Arnault | $163B | +$1.04B | -$13.4B | France |
| 9 | Jensen Huang | $155B | +$524M | +$40.4B | United States |


# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## ஜக்தீப் S. சோக்கர் மறைவு

- அகமதாபாத்தின் இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனத்தின் முன்னாள் பேராசிரியரான ஜக்தீப் S. சோக்கர் சமீபத்தில் காலமானார்.
- இந்தியாவில் தேர்தல் வெளிப்படைத் தன்மையை ஊக்குவிப்பதற்காக 1999 ஆம் ஆண்டில் ஜனநாயகச் சீர்திருத்தங்களுக்கான சங்கத்தை (ADR) இவர் இணைந்து நிறுவினார்.
- வேட்பாளர்களின் குற்றவியல், நிதியியல் மற்றும் கல்வி சார் விவரங்களை வெளியிடுவதை கட்டாயமாக்குவதற்காக முன்மொழியப்பட்ட உச்ச நீதிமன்ற

வழக்குகளை ADR முன்னெடுத்து நடத்தியது.

- ADR மனுக்கள் தேர்தல் பத்திரத் திட்டத்தை ரத்து செய்வதற்கும் தலைமைத் தேர்தல் ஆணையரை நியமிப்பதற்கான செயல்முறையை சீர்திருத்துவதற்கும் பங்களித்தன.
- அவர் சர்வதேச இதழ்களில் கல்வி ஆராய்ச்சிகளுக்கு பங்களித்தார் மற்றும் ஆஜீவிகா பீயூரோ போன்ற பொது நலன் அமைப்புகளை ஆதரித்தார்.





# முக்கிய தினங்கள்

## தேசிய வனத் தியாகிகள் தினம் 2025 - செப்டம்பர் 11

- காடுகள் மற்றும் வனவிலங்குகளைப் பாதுகாப்பதில் தங்கள் உயிரைத் தியாகம் செய்த வன ஊழியர்களைக் கௌரவிக்கும் வகையில் இந்த நாள் அனுசரிக்கப் படுகிறது.
- அவர்களின் துணிச்சலை அங்கீகரித்து, வளங்காப்பிற்கான உறுதிப்பாட்டை ஊக்குவிப்பதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் தேதியானது 1730 ஆம் ஆண்டில் நடைபெற்ற பிஷ்னோய் படுகொலையுடன் தொடர்புடையது.
- அமிர்தா தேவி மற்றும் பிஷ்னோய் சமூகத்தைச் சேர்ந்த 362 பேர், மரங்கள் வெட்டப் படுவதைத் தடுக்க ஆளுக்கொரு கெஜ்ரி மரத்தைக் கட்டிப் பிடித்து தங்கள் உயிரைத் தியாகம் செய்தனர்.
- பிஷ்னோய் சமூகத்தினர் பெரும்பாலும் தெற்கு இராஜஸ்தானில் வாழ்கின்றனர்.
- இந்தச் சமூகம் ஆனது 1485 ஆம் ஆண்டில் குரு மகாராஜ் ஜம்பாஜியால் நிறுவப்பட்டது.

- அவர் தனது சீடர்கள் வாழ 29 விதிகளை வழங்கினார், அவற்றில் மிக முக்கியமானது பசுமையான மரங்களை வெட்டுவதற்கும் விலங்குகளைக் கொல்வதற்கும் எதிரான தடைகள் ஆகும்.
- கெஜ்ரி (வன்னி மரம்) மரம் வறட்சியைத் தாங்குகின்ற மற்றும் மண்ணை வளப் படுத்தும் பண்புகளைக் கொண்டுள்ளது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Remembering Martyrs, Protecting Forests" என்பதாகும்.




## தெற்கு நாடுகளின் ஒத்துழைப்புக்கான ஐ.நா. தினம் 2025 - செப்டம்பர் 12




- வளர்ந்து வரும் நாடுகளிடையே ஒற்றுமை, புத்தாக்கம் மற்றும் பரஸ்பர ஆதரவை ஊக்குவிப்பதற்காக இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது.
- தெற்கு நாடுகள் மற்றும் மும்மைய ஒத்துழைப்பு ஆனது நிலையான மேம்பாடு மற்றும் சமூக நீதியை எவ்வாறு துரிதப்படுத்த முடியும் என்பதை எடுத்துக்காட்டுவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இது முதன்முதலில் 1978 ஆம் ஆண்டில் பியூனஸ் அயர்ஸ் செயல் திட்டத்தை ஏற்றுக் கொண்டதைக் குறிக்கிறது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "New Opportunities and Innovation through South-South and Triangular Cooperation" என்பதாகும்.

## உலக முதலுதவி தினம் 2025 - செப்டம்பர் 13

- இது ஆண்டுதோறும் ஒவ்வொரு செப்டம்பர் மாதமும் இரண்டாவது சனிக்கிழமை அன்று அனுசரிக்கப்படுகிறது.
- உயிர்களைக் காப்பாற்றுவதில் முதலுதவியின் பங்கு குறித்த விழிப்புணர்வை ஊக்குவிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 1878 ஆம் ஆண்டில், சில இராணுவ அதிகாரிகள், பொதுமக்களுக்கு முதலுதவி திறன்களில் பயிற்சி அளிக்கும் கருத்தை முன்னெடுத்து வந்தனர்.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "First Aid and Climate Change" என்பதாகும்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★